# திராவிட சினிமா 10

**கருத்து மக்களிடம் பற்றிக் கொண்டால் தீயாகப் பரவும் என்பதுபோல, திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். கல்வியில் முன்னேற்றம் கண்டு கொண்டிருந்த தலைமுறைக்குக் கொள்கை பேசிய கலைவடிவங்கள் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தன. அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

# கொள்கைக் கூட்டாளிகளின் ‘பணம்’

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

படங்கள் உதவி : ஞானம்





சேலம் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த கலைஞரைச் சந்திக்க கலைவாணர் வந்தார். அடுத்து தயாரித்து- இயக்க இருக்கும் படத்தின் கதையைச் (கதை, பாபு) சொல்லி அதற்கு கலைஞரைத் திரைக்கதை-வசனம் எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டார். கலைஞரும் மகிழ்வோடு சம்மதித்தார்.

அடுத்து சம்பளம் பற்றிய பேச்சு எழுந்தது. கலைவாணரிடம், கலைஞர் ‘ உங்கள் விருப்பம்’ என ஒற்றை வரியில் பதில் சொன்னார். கலைவாணர், உடனே ஒரு பேப்பரை எடுத்து, அதில் நான்கு பூஜ்யம் போட்டுக் கொடுத்தார். அதைப் பார்த்துவிட்டு கலைஞர், இதில் ஏதோ குறும்பு இருக்கிறது என “இன்னும் எத்தனை பூஜ்யம் போட்டாலும் எனக்குச் சம்மதம்” என்றார். கலைவாணர் அந்த பேப்பரை வாங்கி கடைசியாக ஒன்று எனும் எண்ணை எழுதி (00001) சிரித்துக் கொண்டே கொடுத்துள்ளார். கலைவாணரின் குறும்பை ரசித்துக் கொண்டே, அந்தப் பேப்பரை தலைப்பு மாற்றிப் பிடித்துள்ளார் கலைஞர். இப்போது அது பத்தாயிரமானது (10,000). ஆகா என்னையே ரசிக்க வைத்து விட்டீர்களே என கலைவாணர் வயிறு குலுங்க சிரித்து மகிழ்ந்துள்ளார்.

## அதிகார போதைக்கு எதிராக...

1952 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியானது ‘பணம்’ திரைப்படம். ‘பராசக்தி’ வெளிவந்து பெருவெற்றி பெற்ற இரண்டே மாதங்களில் இன்னொரு திராவிட / தி.மு.க. திரைப்படம் ‘பணம்’. கலைவாணர் என்.எஸ்.கே அவர்களின் இயக்கமும், கலைஞரின் திரைக்கதை வசனமும், (சிவாஜி) கணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன் ஆகியோரின் கணீர் குரலும் நடிப்பும் படத்தை மெருகூட்டி சமூக அவலங்களை உரக்கப் பேசியது.

**‘வெள்ளிக்கிழமை பசுமாட்டுக்கு அகத்திக்கீரை வைப்பாரு, சனிக்கிழமை எறும்புக்குச் சக்கரை வைப்பாரு, ஞாயிறு பாம்புக்குப் பால் வார்ப்பாரு, திங்கட்கிழமை ஏழை வீட்டை ஏலம் எடுப்பாரு!’**

திரைக்களம் எளிமையானது. பணப்பித்தும், சாதிப் பித்தும், அதிகார போதையும் கொண்ட பெருந்தனக்காரர்களின் கொட்டம், எளிய மனிதர்களை, குறிப்பாகப் பெண்களை, படுத்தும் பாடுதான் கதைக்களம். உமாபதியின் தந்தை ஆடியபாதம், அவனது மனைவி வைத்தியர் மகள் ஜீவாவை விரட்டிவிட்டு, ஜமீந்தார் மகளை மகனுக்கு மணமுடிப்பது திட்டம். ஜமீந்தார் மகள் பூங்கோதையோ, சுந்தரத்தைக் காதலிக்கிறாள். இடையே வில்லன் இன்ஸ்பெக்டர் ஈஸ்வரன், ஜீவாவை அடைய சதி செய்கிறான். சதிகள் முறியடிக்கப்பட்டு இறுதியில் உமாபதியும் ஜீவாவும் இணைவது தான் கதை.



## கலைஞர் கைவிட்ட ‘இயக்கம்’

கலைஞரின் முத்திரைத் திரைப்படங்களான ‘பராசக்தி’, ‘பணம்’, ‘மலைக்கள்ளன்’, ‘மனோகரா’ என அனைத்திலும் பிறருடைய கதைகளுக்கு அவரது நுட்பமான திரைக்கதையே உயிரூட்டியது. தமிழ்த் திரைப்படங்களில் இயக்குநர்களே திரைக்கதை எழுதுவது வாடிக்கை. ஆனால் அண்ணா, கலைஞர் போன்றவர்கள் திரைக்கதையமைப்பின் வழியாகவே தங்களது கொள்கைகளைப் பேசத் தகுந்த காட்சிகளை உருவாக்கிக் கொண்டார்கள். இதில் கலைஞரின் கைவண்ணம் கொண்டாடப்பட வேண்டியது.

அவரிடம் பலமுறை கேட்கப்பட்ட கேள்வி, அவர் ஏன் படங்களை இயக்கவில்லை என்பதே. அவரும் பலவாய்ப்புகள் வந்ததையும் அவற்றைத் தனது அரசியல் பணிகளுக்கிடையே இயக்கம் எனும் பொறுப்பு பெரும் சுமையாகிவிடும் என்று கருதியே அதைத் தவிர்த்ததாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் திரைப்படங்களை இயக்கியிருந்தால் அதிலும் தன் முத்திரையைப் பதித்திருப்பார் என்பது உறுதி.

## போலி கேலிக்கு ‘மாடல்’

இந்தத் திரைப்படத்திலும் திரைக்கதையில் நுட்பமாகப் பிரதானக் கதைப்போக்கை ‘போலி கேலியாக’ (parody) செய்யும் நகைச்சுவைக் களத்தை உருவாக்கியிருப்பார். அதாவது பிரதானக் கதையில் பெண் ஜீவாவுக்கு ஐயாயிரம் ரூபாய் வரதட்சணை கொடுமை செய்து அல்லலுற வைக்கிறது என்றால், இணைக் கதையான நகைச்சுவையில் என்.எஸ்.கே வுக்கு, மதுரம் அவர்கள் விதிக்கும் இரண்டாயிரம் வரதட்சணை தந்தால்தான் திருமணம் எனும் நிபந்தனை புலம்பவிடுகிறது. கலைஞரின் இந்த நுட்பம் தமிழ்ப் படங்களின் ஒரு முக்கியமான மாதிரி (Model) ஆனது.

பாத்திர உருவாக்கத்திலும் திராவிட சினிமா பாணியின் வார்ப்பு, சுந்தரம். நாயகன் உமாபதியின் அப்பா, சொத்துக்கு ஆசைப்பட்டு மகனின் மனைவியைத் தவிக்கவிடும் மனிதர் என்றால், சுந்தரமோ பணம், சொத்து, கடவுள் நம்பிக்கை, மூடத்தனங்கள் என அனைத்தையும் சாடுகிறான். அவன், ஜமீந்தார் மகளை எந்த நிலையிலும் கைப்பிடிக்கப் போராடுகிறான். அவனுடைய காதலில் உறுதியான பூங்கோதையும், கட்டாயத் தாலி கட்டப்பட்ட பின்னும் தன் கணவனிடம் தான் கர்ப்பிணி என்பதைத் தெரிவித்து மணமுறிவைச் சாத்தியமாக்குகிறாள்.

## தீனா மூனா கானா

‘பணம்’ திரைப்படம் முழுக்கவும், சிந்திக்க, சிரிக்க என வசனமாரி பொழிகிறது. படத்தின் தொடக்கக் காட்சியிலேயே, ‘நஞ்சையில கரும்பு போட்டதுனாலதான் பஞ்சம் வந்துருச்சா? சக்கரையில்லாம காபி எப்படிக் குடிப்ப?’ எனும் பண்ணையாருக்கு, ‘கஞ்சிக்கு வழியில்லாதவன் காபிக்கெங்கங்க போறது’ என்கிறார் பண்ணையாள்.

ஹிட்லர் கிராப், மீசை வைத்த கலைவாணர் துரை, ‘உலகத்த மடியில வைச்சுருக்கேன்’ என ‘திருக்குறள்’ நூலை எடுத்துக் காட்டுகிறார். அவரது ‘திருக்குறள் முன்னேற்றக் கழகம்’ பூடகமாக தி.மு.க.வையே குறித்தது. இதை ‘தீனா மூனா கானா’ பாடலிலும் பாடுவார் கலைவாணர்.

சுந்தரம் பற்றிச் சொல்லும் தரகர், ‘அவனா... அவனுக்கு பொதுக் கூட்டத்திலயும், மாநாட்டிலும் சீர்திருத்தக் கருத்துப் பேசுறதுதான் வேலை‘ என்கிறார். சுந்தரம் சொல்கிறான், ‘பணம் – மோகனமான மூன்றெழுத்து அழகி, முட்டாளின் மஞ்சத்திலே உறங்குவாள். முரடனின் கைகளிலே சிக்குவாள்’. ‘கருணையானந்தம்’ பட்டம் பெறும் ரத்தன்லால் சேட் பற்றி இப்படிப் பேசப்படுகிறது: ‘வெள்ளிக்கிழமை பசுமாட்டுக்கு அகத்திக்கீரை வைப்பாரு, சனிக்கிழமை எறும்புக்குச் சக்கரை வைப்பாரு, ஞாயிறு பாம்புக்குப் பால் வார்ப்பாரு, திங்கட்கிழமை ஏழை வீட்டை ஏலம் எடுப்பாரு’ என்று.

தனது உயிரை மாய்த்துக் கொள்ள முனையும் உமாபதிக்கும், அவனைத் தடுக்கும் சுந்தரத்துக்குமான உரையாடல் இது:

உமாபதி: ‘சாவு என் இன்பலோகத்துக்கு ஏணி, உற்சாகபுரியின் ஊஞ்சல் (தூக்கு). துரோகிகளைத் தாலாட்டும் தொட்டில்’.

சுந்தரம்: ‘சாவுக்குக் காவியம் பாடும் நீ யாரப்பா? எத்தனையோ பெரிய கொள்கைகளுக்காக எத்தனையோ பேர் செத்திருக்கிறார்கள். விஷத்தைக் கையிலேந்தி வீரத்தை நெஞ்சிலேந்திய சாக்ரடீஸ், அடிமைத் தளையை அறுத்தெறிந்த ஆப்ரஹாம் லிங்கன். மதவெறி எதிர்த்த காந்தி. திருப்பூர் திராவிடக் குமரன். மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாற்ற நினைத்திடும் சிறைச்சாலையென எனப் பண்பாடி பைந்தமிழ் காத்த தாளமுத்து, நடராஜன்’ எனப் புகழ்பாடுகிறான் சுந்தரம்.

கலைவாணர் பாடிய ‘எங்கே தேடுவேன், பணத்தை எங்கே தேடுவேன்’ பாடலில் கண்ணதாசன் வரிகள் திராவிட அரசியலை நேரடியாகப் பேசியது. அதில் வரும் ‘தேர்தலில் சேர்ந்து தேய்ந்து போனாயோ’ எனும் வரி அந்தநாளில் நடந்ததாகப் பேசப்படும் புனிதர்களின் அரசியலை அப்பட்டமாக்குகிறது. இறுதிக் காட்சியின் வசனங்கள் அனல் பறக்க வைப்பவை. ‘பணத்தையே கடவுளாகக் கொண்ட பித்தனே, பணம் படுத்திய பாட்டைப் பார்‘ என முகத்திலறைகிறது.

...படம் விரியும்

## துணைபோகும் முயற்சிகள்!



தமிழ்நாட்டு அரசியலில் இடமில்லாத வகுப்புவாத சக்திகள், கட்சிகள் எப்படியாவது இங்கு காலூன்ற துடிக்கின்றன. அந்த பாசிசத்துக்கு எதிராக எழுத்தாளர்கள் ஒன்று திரள்கின்றனர். எழுத்தாளர் ஜமாலனின் பதிவு இது.

“தி.மு.க. வெறுப்பு என்பது பல ஆண்டுகளாக உள்ளது. இன்று அதில் அதிகம் ஊடக வெளிச்சம்படுகிறது. தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக்கட்சிகள் ஒன்றிணைந்து நிற்பதுடன், தீவிரமாக மதச்சார்பின்மை, மதநல்லிணக்க அரசியலை முன்னெடுக்க வேண்டும். அதுதான் இங்கு பெரும்பான்மை. வெறும் டிவிட்டர் உள்ளிட்ட ‘வார் ரூம்’ காசுக்கு எழுதும் அல்லக்கைகளை வைத்து பா.ஜ.க. இங்கு தன்னை நிறுவிக்கொள்ள முயல்கிறது.

அதன் பொய்ப் பிரச்சாரத்தில் பலரும் சிக்கியுள்ளனர். உண்மையில் தி.மு.க. கூட்டணியைத் தவிர, பா.ஜ.க. எதிர்ப்பை யார் செய்கிறார்கள்? அதனால் நிச்சயமாக தி.மு.க.வை பலவீனப்படுத்துவது, பா.ஜ.க.வை வரவழைக்கும் முயற்சிக்குத்தான் துணைபோகும்” என்று பதிவிட்டுள்ளார்.

## :ப்ளாஷ்பேக்



### ‘முரசொலி’யில் பெயர்!



செல்வராஜ்

அண்ணா அறிவாலயம் கட்டிட நிதி வசூல் நடத்த தமிழ்நாடு முழுக்க மிகத் தீவிரமாகப் பயணித்தார் தலைவர் கலைஞர். ஒரு நாளில் 10 க்கும் மேற்பட்ட கூட்டங்களில் கூட அவர் பேசி நிதி வசூல் செய்து கொண்டிருந்தார். ஒரு சின்ன கவரில் பணத்தைப் போட்டு அவரிடம் அளித்தேன். அவரின் கரகரத்த குரலில் ‘எவ்வளவுயா?’ என்று கேட்டார், நான், ‘525 ரூபாய்’ என்றேன். தலைவர் கலைஞர் அந்த கவரை வாங்கிப் பார்த்துவிட்டு உதவியாளர் சண்முகநாதனிடம் அளித்தார். மறுநாள் ‘முரசொலி’யில் என் பெயரும் நிதியளித்தோர் பட்டியலில் இடம்பெற்றது. அவர் என்னுடன் பேசிய முதல் பேச்சும் இதுதான். அதனால் இப்படம் மறக்க முடியாதது.


**-தென்றல் செல்வராஜ்,
கழக சட்ட திட்டத் திருத்தக்குழு
உறுப்பினர், பொள்ளாச்சி**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033 – 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம் காமராஜரைக் காப்பாற்றிய கழகம்!

**1966-ஆம் ஆண்டு நவம்பர் மாதம், புதுடெல்லியில் காமராஜர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அப்போது காமராஜர் ‘கிங் மேக்கர்’ எனப் பெயர் எடுத்திருந்த நேரம். பாரதிய ஜனசங்கம் என்கிற அமைப்பினர், ‘பசுவதைச் சட்டம்’ அமல்படுத்த வேண்டும் என நாடாளுமன்றம் அருகே திரண்டு கலவரத்தில் ஈடுபட்டனர். அப்போது காமராஜர் தங்கி இருந்த வீட்டை உடைத்துச் சேதப்படுத்தி, தீ வைத்துக் கொளுத்தினர். காமராஜர் செய்வதறியாது திகைத்து நின்ற நேரத்தில், தக்கசமயத்தில் அவரைக் காப்பாற்றி துணிச்சலுடன் அழைத்துச் சென்றார் ஒரு தமிழர். அவர் நமது தி.மு.கழகத்தின் தொண்டர் கோதண்ட பாணி.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 150




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.